# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 90/2020 தேதி-08.04..2026

(P..W.2) . வினு

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை வாதிகள் எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழிப்பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் எத்தனை பட்டிகை சொத்துகள் சேர்த்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பட்டிகை சொத்துகளின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி மற்றும் அவரது தாயார் வா.சா.ஆ. 2 கிரைய ஆவணத்தை எனக்கு எழுதிக்கொடுத்தார்களா என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாதிகள் கட்சி இல்லை என்றால் சரிதான். எனக்கு கிடைத்த சொத்து பிரதிவாதி மற்றும் அவரது தாயாருக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தில் மீதமிருக்கும் சொத்தைதான் வாதிகள் வழிப்பாதையாக கேட்டுள்ளனர் என்றால் சரிதான்.

எனக்கு எழுதிக்கொடுத்த சொத்தின் தெற்கு பக்கம் ஒரு பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால் சரியல்ல குடும்ப வழிப்பாதை இருக்கிறது. மேற்படி குடும்ப வழிப்பாதை யாருக்கு உரிமைப்பட்டது என்றால் முருகன் அவர்களது குடும்பத்திற்கு உரிமைப்பட்டதாகும். தெற்கு பக்கம் இருக்கும் வழிப்பாதையில் பஞ்சாயத்தால் இன்டர்லாக் டைல்ஸ் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை பஞ்சாயத்துக்கு உரிமைப்பட்ட பாதை என்பதால்தான் அதில் இன்டர்லாக் டைல்ஸ் போட்டு பொதுப்பாதையாக உபயோகிக்கப்படுகிறது என்றால் முருகனது குடும்பத்தார் பஞ்சாயத்திற்கு எழுதிக்கொடுத்ததால் பஞ்சாயத்தால் இன்டர்லாக் டைல்ஸ் போடப்பட்டது. மேற்படி பாதையை ஒட்டிதான் வாதிகளின் சொத்து உள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்கம் இருக்கும் பாதை வழியாக வாதிகள் அவர்களது சொத்திற்கு செல்ல முடியும் என்றால் சரிதான்.

எனது சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் ஒரே மட்டமாகத்தான் இருக்கிறது என்றால் தற்போது உள்ளது முன்பு அப்படி இல்லை. நான் எனது சொத்தில் எந்த மாறுதலும் ஏற்படுத்தவில்லை. எனது சொத்திற்கும் வழக்கு எ பட்டிகை சொத்திற்கும் எவ்வளவு உயரம் இருக்கும் என்றால் ஒரே மட்டமாகத்தான் உள்ளது.

தெற்கு பக்கம் இருக்கும் ரோடும் எனது வீடும் ஒரே மட்டமாக இருக்கும் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தும் அதற்கு கிழக்கு பக்கம் இருக்கும் எ பட்டிகை சொத்தும் 7 அல்லது 8 அடி உயரம் இருக்கும் என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்திற்கும் எ பட்டிகை சொத்திற்கும் 7, 8 அடி உயரமாக இருக்கும் என்றால் சரிதான். பி பட்டிகை சொத்து தற்போது பாதையாக இல்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட சொத்தின் வடக்கு பக்கம் பொதுப்பாதை உள்ளது என்றால் சரியல்ல. அது எனது குடும்ப பாதையாகும். அதில் காங்கிரீட் போட்டது யார் என்றால் பாதி பஞ்சாயத்தாலும் மீதம் இருக்கும் இடத்தில் எனது குடும்பத்தாரும் போட்ட காங்கிரீட் ஆகும். நான் பகுதியாக பஞ்சாயத்தால் போடப்பட்டது எனக் கூறுவது தவறு மேற்படி பாதை முழுவதும் பஞ்சாயத்தால்தான் போடப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தின் வடக்கு பக்கம் இருக்கும் பாதை வழியாக எ பட்டிகை சொத்திற்கு வரமுடியும் என்றால் பிரதிவாதி வாங்கிய சொத்தின் வழியாக சென்றால் எ பட்டிகை சொத்திற்கு செல்ல முடியும். பி பட்டிகை சொத்தில் தற்போது காங்கிரீட் வீடு உள்ளது என்றால் சரிதான்.

நானும் பிரதிவாதியும் நல்ல உறவு முறையில் இல்லை என்றால் சரிதான். வாதிகளும் நானும் நல்ல உறவு முறையில் உள்ளோம் என்றால் சரிதான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் இருக்கும் சங்கதிகளை யார் சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் நான் சொல்லி எனது வழக்கறிஞர் தயார் செய்தார். எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறியிருக்கும் சங்கதி அனைத்தும் வாதிக்கு சாதகமாக நான் கூறும் பொய் சாட்சியாகும் என்றால் சரியல்ல.